**தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மொனறாகலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் கூறப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

#### 1.6.1.1 வருமானம் அல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதி பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,708,423,261 இற்கு ஆண்டில் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 81,000,000 தொகை சீராக்கம் செய்யப்பட்டு இருக்காமையால் ஆண்டின் இறுதியில் கணக்கில் மீதி ரூபா 81,000,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ACA 3 படிவத்தின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு ரூபா 2,708,423,261 ஆகும். அதன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றிற்காக கட்டுநிதி பெறுவனவாக அக்கட்டுநிதி பெறுவனவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தேறிய காசுப்பாய்ச்சல் உள்ளடக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்படவில்லையென அறிய தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரிய அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் இலக்கம் 06 இன் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கில் பதிவுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.1.2 வைப்பு பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் வைப்புக்கள் பெறுவனவு ரூபா 379,873,089 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் ரூபா 379,912,654 என ரூபா 39,565 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசணையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.1.3 மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செவனகல பிரதேச செயலகத்தினால் 277-01-02-0-1301 வாகன செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 20,515 ஆன கெப் வண்டிக்கான சேவை செலவினம் 277-01-01-0-2003 மூலதன சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் (வாகன) செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றேன். இவ்வாறான தவறுகள் இடம் பெறாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியான செலவின விடயங்கள் வகைப்படுத்தப்பட்டுள் ளவாறு நியமப் படுத்தப்பட்டுள்ள வகையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.1.4 மூலதனச் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகம் மற்றும் வெள்ளவாய, பிபில பிரதேச செயலகத்தினால் 277-1-1-0-2104 கட்டிடங்கள் மற்றும் நிர்மாண செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய மொத்தம் ரூபா 1,827,711 ஆன மூலதனச் சொத்துக்களை கையேற்றல் செலவினம், மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவின விடய இலக்கம் 277-1-1-0-2001 கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்க பெறுமதி ரூபா 1,827,711 ஆல் குறைத்தும் மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவினம் ரூபா 1,827,711 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 பாதீட்டின் மூலம் நிதிச் சொத்துக்களை கையேற்பதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆண்டில் இந்நிர்மாணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாலும் மூலதனச் சொத்துக்களை மேம்படுத்தும் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிர்மாணங்களின் பெறுமதி ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்களின் பெறுமதிக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சரியான செலவின விடயங்கள் வகைப்படுத்தப்பட்டுள் ளவாறு நியமப் படுத்தப்பட்டுள்ள வகையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.1.5 வைப்பு கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் வைப்புக்களிலிருந்து கொடுப்பனவு ரூபா 424,206,191 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் ரூபா 424,242,767 என ரூபா 36,576 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பானகூற்று

#### 1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வீடுகள் அல்லாத கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் (பூர்த்தி செய்யப்படாத வேலைகள்) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டில் ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா ரூபா 4,000,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது. | ஆரம்ப மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய நிதியல்லாத சொத்துக்களின் கீழ் 2020 சனவரி 01 இல் உள்ளவாறும் மற்றும் திசெம்பர் 31 பூர்த்தி செய்யப்படாத வேலைகளாக ரூபா 952,988 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறான நடைமுறை வேலையொன்று காணப்படவில்லை. | இப்பெறுமதி 2021 மார்ச் மாதத்தின் போது வீடுகள் அல்லாத கட்டிடங்களின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

#### 1.6.2.2 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்கள புத்தகங்களுடன் திறைசேரி கணனி அச்சிட்டு பதிவுடன் ஒப்பிடும் போது திறைசேரி கணனி அச்சட்டின் பிரகாரம் அரச | கடந்த ஆண்டில் புத்தள பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறான வரவு மீதி ரூபா 2,700 மற்றும் வெள்ளவாய வலயக் கல்வி திணைக்களத்தினால் | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் ஆரம்ப மீதி சமமாக இருக்க வேண்டும் |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 100,222,914 ஆக இருந்த போதும் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 99,938,116 ஆக இருந்தமையால் அம்மீதிகளுக்கு இடையே ரூபா 284,798 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட தவறான செலவு பதிவான ரூபா 287,497 ஆக இருந்தமையால் ஆரம்ப மீதி வேறுபடுவதற்கு காரணமாக இருந்தது. எதிர்காலத்தில் அவ்வேறுபாடு தாக்கமளிப்பதில்லை. | |
| (ஆ) | மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 2,688,119 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,957,679 தொகை ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட் காலமாக அறவிடப்படாத கடன் மீதியாக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் நிதிஏற்பாடுகளை மாற்றும் போது உள்ளவாறான தேவைப்பாட்டை இனங்கண்டு அதன் பிரகாரம் மாற்றல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் அவ்வாறு செயற்படாமையால் 07 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 4.7 சதவீதம் முதல் 28.7 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | 277 செலவின தலைப்பிற்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டினை கருத்திற் கொண்டு நி.பி 66 இன் பிரகாரம் மாற்றப்பட்ட செலவின விடயங்களின் ஆண்டின் இறுதியின் போது சேமிப்பொன்று காண்பிக்கப்பட்ட போதும் 2 ஆம் இலக்க கருத்திட்டத்தில் இம்மாற்றப்பட்ட செலவின விடயங்களில் சேமிப்பொன்று காண்பிக்கப்படவில்லை. 02 ஆம் இலக்க கருத்திட்டத்தில் அதாவது பிரதேச செயலகத்தின் மூலம் நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | உள்ளவாறான தேவைப் பாட்டை இனங்கண்டு அதன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டில் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் ஒழிய எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலையொன்று அல்லது சேவையொன்று அல்லது வழங்கலுக்காக எந்தவொரு செலவினத்திற்கு அல்லது பொறுப்பிற்கு அல்லது பணம் செலுத்தும் பொறுப்பிற்கு கடப்பாக இருக்கக் கூடாது எனினும் மாவட்ட செயலகத்தினால் 06 செலவின விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த நிதிஏற்பாடு களை மிகைத்து ரூபா 1,290,286 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நி.பி 94(ii) இல் வருடாந்த மீண்டெழும் சேவைகள் அல்லது வழங்கலுக்காக முன்னைய மூன்று ஆண்டுகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அளவில் சராசரியில் 50% வரை அடுத்த நிதியாண்டில் தீர்வு செய்யும் பொறுப்புகளுக்காக கடப்பாடுகளுக்காக பொறுப்புக்கள் ஏற்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த 03 நிதியாண்டுகளில் 50% இனை மிகைக்காத வகையில் அடுத்த ஆண்டிற்காக கடப்பாடுகளுக்காக உட்பட்டதாக தயவுடன் அறிய தருகின்றேன் | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படக் கூடாது. |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியின் போது செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 20,084 ஆன செலவினம் நிதிக் கூற்றுக்களுடன் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையினதும் ஸ்ரீ லங்கா டெலிகொம் ஆகிய நிறுவனங்களில் பட்டியல் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசணையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சனாதிபதி செயலகம் | | |
| (i) மொனறாகலை மாவட்டத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் கீழ் 11 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77,691,659 தொகை கிராம சக்தி சங்கங்களின் பெயரில் பேணிச் செல்லப்படும் 125 வங்கிக் கணக்குகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சமுர்தி, வீட்டுப் பொருளாதார, தேறிய நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 பெப்ரவரி 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சகல மாவட்ட செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிய தருகின்றேன். | வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) கிராம சக்தி சங்கங்களின் முதலாவது கட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது 07 பிரதேச செயலகங்களால் 2019 ஆம் ஆண்டின் போது சுழற்சிக் கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த பணத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 8,361,836 அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டன. | குறித்த சங்கம் மீண்டும் கணக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | | |
| 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை திட்டத்தை செயற்படுத்துவதற்கு மொனறாகலை மற்றும் படல்கும்புற பிரதேச செயலகங்களுக்காக மாவட்ட | வீட்டுத்தோட்ட உபகரண தொகுதியொன்று இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் தற்போது காணப்படும் | திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் ஆக்கபூர்வமாக பொருட்களை |

| | | |
|---|---|---|
| செயலகத்தினால் 2019 செப்தம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,299,523 ஆன வீட்டுத்தோட்ட உபகரணங்கள் 2020 நவம்பர் 27 ஆந் திகதி நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கவில்லை. | கொவிட் - 19 நோய் நிலைமை குறைந்ததும் எஞ்சிய நலனாலிகளுக்காக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பகிர்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபை சட்டத்தின் 16(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் திருத்திய 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 89 ஆம் பிரிவு. | 2,330,000 | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தினால் கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் கீழ் குழாய்க் கிணறு நிர்மாணச் செயற் திட்டத்தின் போதும் மொனறாகலை பிரதேச செயலகத்தினால் "கஷ்டமான கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி" இற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயக் கிணறுகனை நிர்மாணிக்கும் செயற் திட்டத்தின் கீழ் 04 பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தினதும் நீர் வளச் சபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி செயற்பாடுகளின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந் தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்மாணங்களுக்கு முன்னர் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.3 ஆம் பிரிவு | 312,325 | வதி இல்லங்களில் (ஷமரி) சிக்கன வாடகை அதில் குடியிருக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரிடமும் ஒரே மற்றும் சமமான பகுதிகளாக அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மொனறாகலை மாவட்ட செயலகத்தில் மகளிர் மற்றும் ஆண்கள் விடுதிக்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட சிக்கன வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | வதி இல்லங்களில் (ஷமரி) சிக்கன வாடகை அறவிடும் போது சிக்கல்கள் காணப்படுவதால் அறை அடிப்படையில் அல்லது குடியிருக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்து தருமாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396 | 375,470 | சனவனகல, மடுள்ள மற்றும் பிபில பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த 06 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின் றேன். இக்காசோலைகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) நிதிப் பிரமாணம் 449(2)(ஆ) | 1,013,882 | பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு வீட்டுத்தோட்ட செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக செலவினத்தை மேற்கொள்வதற்கு | ஏற்றுக்கொள்கின்றே ன்நலனாலிகளின் வேண்டுகோளின் பேரில் உபகரணங்கள் மற்றும் நடுகைப் பொருட்கள் பெற்றுக்கொள் வதற்காக மேலதிக நிதிஏற்பாடொன்று தேவையாகும். இத்தொகையை | முன்அதிகார பலத்தை பெற்றுக்கொள்ளா மல் நிதிஏற்பாடுகளை மிகைத்து செலவிடக் கூடாது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 130-0-02-07-2509 ஆம் செலவின விடயத்தின் கீழ் ரூபா 4,750,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருந்தும் மொனறாகல மாவட்ட செயலகத்தினால் ரூபா 5,763,882 இத தொடர்பாக செலவீடு செய்யப்பட்டிருந்ததுடன் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,013,882 தொகை செலவிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | வழங்குமாறு 2019 நவம்பர் 16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்ட துடன் செலவின தலைப்பின் கீழ் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளத ால் செலவினத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| (iii) | நிதிப்பிரமாணம் 571(3) | 9,230,126 | மொனறாகலை மாவட்ட செயலகத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 06 வைப்புக் கணக்குகளில் 2 வருடங்கள் முதல் 5 வருட காலப்பகுதி யொன்று கடந்துள்ள மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான நிறுத்திவைக்கப்பட்ட பணம், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றே னஅதன் பிரகாரம் அடுத்த நடவடிக்கை எடுப்பேன். ஒப்பந்த நிறுத்தி வைத்தல் மீதிகளிலிருந்து ஒரு பகுதி தீர்வு செய்யப்பட்டுள்ளது. திறைசேரியிடமிருந் து கிடைக்கும் கட்டுநிதியின் பிரகாரம் எஞ்சிய மீதியை தீர்வு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்க ளுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளத ாக | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மொனறாகல மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான தகவல்கள், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாடு, திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காகன வருடாந்த பெறுகை செயற்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் சீராக்கப்பட்டு எதிர்காலத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுவதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகளை பயன்படுத்தி பொதுகொலபிட்டிய அணைக்கட்டு புனரமைப்பு திட்டத்தின் கீழ் சூரிய பெனல் முறைமையொன்றை நிறுவுவதற்காக ரூபா 8,700,000 தொகையும் பயிர்ச்செய்கை கிணறு, நீர் பம்பியறை மற்றும் வடிகால் அமைப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,080,309 பெறுமதியான உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டு சூரிய பெனல் முறைமையொன்றை நிறுவுவதற்காக ரூபா 8,700,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக பணம் கிடைப்பதில் தாமதம் மற்றும் பகுதி கொடுப்பனவிற்காக போதியளவில் பணம் கிடைக்காமை காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகள் உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வாய்க்காலை அமைத்தல் 2019 செப்தம்பர் 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாண செயற்பாடு மேற்கொள்ளாமை காரணமாக திட்டத்திலிருந்து நலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் சூரிய பெனல் முறைமையின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுக்காமையளால் பொருத்தப் பட்டிருந்த தொன்னூறு சூரிய பெனலில் இரண்டு சேதமடைந்திருந்தன. | | |
| (ஆ) | மொனறாகல மாவட்ட செயலகத்தினால் பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2019 ஆம் ஆண்டில் சிறிய குளங்கள் அணைக்கட்டு புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் சியம்பலாண்டுவ, கரமட குளத்தை புனரமைப்பதற்காக ரூபா 4,916,581 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் குளத்தை பயன்படுத்தாமையால் செலவிடப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமொன்றாக மாறியிருந்ததாகவும் இக்குளத்தை புனரமைப்பு செய்வதன் மூலம் எதிர்பார்த்த 20 நலனாலி விவசாயிகள் மூலம் 50 ஏக்கர் அளவிலான வயல் செய்கை மேற்கொள்ள இருந்த நோக்கம் நிறைவேற்றப் படவில்லையென அவதானிக்கப்பட்டது. | அந்த செயற்திட்ட முன்மொழிவு பிரதேச விவசாய குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும். |
| (இ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மொனறாகலை மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது மாவட்ட விளையாட்டு தொகுதி நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 2,019,484,413 ஆன செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக 2020 ஒக்தோபர் 14 | ஏற்றுக்கொள்கின்றேன் இந்நிர்மாணத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான நிதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை காரணமாக தற்போது வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதனால் விளையாட்டுத் தொகுதி முழுமையாக | செயற்திட்டத்தின் மூலம் எதர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி வரை ரூபா 13,389,919 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. | பயன்படுத்த இயலுமை காணப்படவில்லை. | |
| (ஈ) | மடுள்ள பிரதேச செயலகத்தினால் பயிர்ச்செய்கை கிணறொன்று நிர்மாணிப்ப தற்காக நலனாலி ஒருவருக்கு ரூபா 500,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பயிர்ச் செய்கை கிணற்றை அகழும் போது கல் ஒன்று தோன்றியதால் நிர்மாண செயற்பாடுகள் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தது. அதன் படி பயிர்ச்செய்கை கிணற்றை நிர்மாணிப்பதன் மூலம் எதிர்பார்த்த மழை இல்லாத காலங்களில் பயிர்ச்செய்கை செயற்பாட்டிற்காக நீரைப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் நிறைவேற்றப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | அதிகளவு வெப்பமான காலங்களில் நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கல்லை உடைத்து அகற்றுவதற்கு நலனாலிக்கு அறிவுறுத்தல் வழங்கி அக்கரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செயற்பாடு களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனறாகல மாவட்ட செயலகத்தினால் பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஊவா வெள்ளஸ்ஸ பௌதீக அபிவிருத்தி மற்றும் மனித வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் சிறிய குளக் கட்டு புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யபரத்தாவ குளத்தை புனரமைப்பதற்காக ரூபா 7,796,030 ஆன சிவில் வேலை பெறுமதிக்கு 60 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு 2019 செப்தம்பர் 27 ஆந் திகதி | கம்பெரலிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்நீர்ப்பாசன நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் போதியளவு பணம் கிடைக்காமை காரணமாக அச்செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப் பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்காமையால் செயலாற்றல் பிணைப் பொறுப்பின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட வேலைகளை உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ரூபா 950,609 ஆன பகுதிக் கொடுப்பனவு ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2020 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரையில் ரூபா 6,739,789 ஆன மதிப்பிடப்பட்ட வேலை நிறைவேற்றப்படவில்லையெனவும் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவின மொன்றாகவும் அவதானிக்கப்பட்டது. மேலும் 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(அ) பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப் பட்டிருந்த ரூபா 389,802 ஆன செயலாற்றல் பாதுகாப்பின் காலம் 2019 திசெம்பர் 25 ஆந் திகதி காலாவதியாகி யிருந்ததுடன் திட்டத்தை பூர்த்தி செய்யாதிருக்கையில் காலநீடிப்பும் வழங்கப் பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) புத்தள பிரதேச செயலகத்தினால் பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி கஷ்டமான கிராமங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு 11 பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்கு நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 நலனாலிகள் மாத்திரம் பயிர்ச்செய்கை கிணற்றை தோண்டி கிணற்றை கட்டும் வரை நிர்மாண வேலைகளை மேற்கொண்டிருந்ததுடன் அந்நலனாலிகளின் இரண்டு | பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட இச்செயற்திட்டத்திற்காக மீண்டும் நிதி ஏற்பாடு கிடைக்காமையால் செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் போனதாக | செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த பணத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் செயற் திட்டத்தை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

பேருக்கு முதலாவது தவணை மாத்திரமும் எஞ்சிய இரண்டு நலனாலிகளுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது தவணையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் இந்நலனாலிகளும் விவசாய கிணறுகளின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 உள்நாட்டு நிதியங்களால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொனறாகல மாவட்ட செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் நிறைவேற்றப்பட வேலைகளின் பகுதி குறைத்து நிறைவேற்றியிருந்தமை, உரித்தல்லாத விலை விகிதங்களை பயன்படுத்துதல் வீதி விலை விபரங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ஆலோசணைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, பூர்த்தி செய்த வேலையை மிகைத்து கொடுப்பனவு செய்திருந்தமை, அரசிற்கு சாதகமாக மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் தாமதக் கட்டணங்களை அறவிடாமை போன்ற விடயங்களுக்குரியதாக ஒப்பந்தக்காரர்களுக்கு மொத்தம் ரூபா 7,472,044 தொகை கூதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மொனறாகலை மாவட்ட செயலகம் மற்றும் மொனறாகலை, புத்தள மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகங்களுக்கு உரியதாக ரூபா 4,524,460 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது. | இந்த செயற்திட்டங்களுக்குரிய அறவீடுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு அறிக்னை தயாரித்தல் நியாயமாகவும் பொறுப்புடனும் இருக்க வேண்டியதுடன் கூடுதலாக செலுத்திய பணத்தை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) பொது முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி | நிறுத்திவைத்தல் பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் அதன் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி மலைநாட்டு உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரைசன் நீர் வீழ்ச்சிக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்காக மாவட்ட செயலகத்தினால் ரூபா 2,434,035 ஆன கொடுப்பனவு அறிக்கையொன்று தயாரித்து அதில் ரூபா 1,376,704 ஆன பகுதிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. வீதியின் இருபக்க வீதியின் விளிம்பினை நிரப்புவதற்காக ரூபா 79,059 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படவில்லையெனவும் இச்செயற்பாடு நிறைவேற்றப்பட வேண்டிய மிகவும் அத்தியவசிய செயற்பாடொன்றாகவும் அவதானிக்கப்பட்டது. | முன்னர் இப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நிறைவேற்றப் பட்டதாக உறுதிப்படுத்தப் பட்டதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் மியகெட்டுஆர குளத்தை புனரமைப்பதற்காக ரூபா 49,310,900 ஆன மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அம்மதிப்பீட்டில் கருங்கல் பயன்படுத்தப்பட்டு குளத்தின் அலைதாங்கி நிர்மாணிப்பதற்காக ரூபா 4,076,800 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கற்கள் கொள்வனவுவிற்காக மாத்திரம் ரூபா 4,974,900 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயத்தை மகைத்து ரூபா 898,100 ஆன கருங்கல் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. குளக்கட்டில் பரப்பியிருந்த கருங்கல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட தடிப்பில் பரப்பாமல் இருந்ததுடன் எஞ்சிய கருங்கற்களை வேலை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மியகெட்டுஆர குளத்தை புனரமைக்கும் போது குளத்தின் அணைக்கட்டின் அலை தாங்கிக்காக கருங்கற்கள் பரப்பப்பட்டுள்ளதுடன் அதன் ஆரம்ப இடல் பகுதியொன்றாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழை பெய்வதற்கு அண்மித்துள்ளதால் இயந்திரங்களின் மூலம் கருங்கல் பரப்பட்டிருந்த போதும் அதன் வேலைகள் முடிவடையாமையால் நிர்ணயிக்கப்பட்ட தடிப்பு இருப்பதாக அறிய தருகின்றேன். குளக்கட்டின் அலைதாங்கி நிர்மாணத்தை பூர்த்தி செய்யாமையால் எஞ்சிய கருங்கற்களை குளத்தின் வளவில் குவித்து வைத்திருப்பதாக அறிய தருகின்றேன். | நிர்மாணம் மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த | வீடு நிர்மாணித்தல், நிலத்தை அமைத்தல் மற்றும் அத்திவாரம் | நிர்மாணசெயற்பாடு தொடர்பாக பின்தொடர் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண செயற்திட்டங்கள் மற்றும் மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் - 2020 இன் கீழ் பிபில பிரதேச செயலகத்தினால் வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பதிலாக நிலத்தை தயார்படுத்தல மற்றும் அத்திவாரம் இடுதல் என்பவற்றிற்காக நலனாலி ஒருவருக்கு ரூபா 200,000 மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை வீட்டை நிர்மாணிக்கும் இடத்தில் கொங்கிரீட் தூண்களை நிரம்மாணிப்பதற்கு குழிகளை மாத்திரம் வெட்டப்பட்டிருந்தது. | இடுதல் கடந்த சில மாதங்களில் காணப்பட்ட அதிக மழை காரணமாக மிக சிக்கலாக இருந்தமை வேலை தாமதத்திற்கு பிரதான காரணமான இருந்தது. அத்தோடு இந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட உள்ள வீடு மாடி வீடொன்றாகையால் 05அடி அளவு ஆழமான குழிகளை அமைக்கவும் காணி வயல் காணியாக இருப்பதால் கொற்கிரீட் தூண்கள் அமைப்பற்கு முன்னர் ஒரு அடி அளவிலான கொங்கிரீட் தளனமொன்று இடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக எதிர்வரும் வேலைகள் நடைபெற்று வருவதாக பிபில பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது |
| (உ) | செவனகல பிரதேச செயலகத்தினால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டம் - 2018 இன் கீழ் வெலிஆர விஹாரைக்கு அருகில் குமாரபுரவிற்கு உள்ள வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 951,505 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வீதியில் அச்சுக்கல் இடப்பட்டுள்ள பகுதியின் இரண்டு பகுதிகளிலும் ரூபா 33,357 செலவிட்டு இடப்பட்டிருந்த கொங்கரீட் சுவர்களில் (Curb) ஒரு பகுதியில் கொங்கரீட் சுவரின் 19 இடங்களில் வெடிப்பு ஏற்பட்டு உடைந்து செல்வதற்கு அண்மித்த நிலைமையில் காணப்பட்டது. | பிடிகாசு விடுவிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந்தக்காரரைக் கொண்டு சரி செய்வதற்கு இயலுமையொன்று இல்லையெனவும் பராமரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாண செயற்பாடுகள் உரிய தரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிர்மாணங்களின் குறைபாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் சபிரி கமக் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் - 2020 கீழ் வள்ளிமாத்தாகம கிராம சேவையாளர் பிரிவின் வீதியொன்றுக்கு கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 989,735 ஆன செலவில் 108 மீற்றர் நீளத்திற்கும் 3.1 மீற்றர் அகலத்திற்கும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் அதன் 04 இடங்களில் 16.87 சதுர மீற்றர் மற்றும் | ஏற்றுக்கொள்கின்றேன். மேற்படி வீத மணல், கற்கள் ஏற்றப்பட்ட டிபர் வண்டிகள் ஓட்டத்திற்காக அவ்வப்போது ஈடுபடுத்தப்படுவதால் வெடிப்பேற்பட்டிருந்தது. அவ்வாறு வெடிப்பேற்பட்ட பகுதிகள் தார் மற்றும் சிப்ஸ் என்பவற்றை பயன்படுத்தி செப்பனிடுமாறு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் பிரகாரம் சாரண மூட்டினை | வீதியை நீண்டகாலம் பயன்படுத்தக்கூடிய வகையில் உரிய தரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் இரண்டு இடங்களில் 10.7 சதுர மீற்றர் மற்றும் 1.9 சதுர மீற்றர் அளவில் கோடுகள் விழுந்திருந்தன. அத்தோடு மணல் மற்றும் தார் கலவையில் வீதியில் சாரண மூட்டு இடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு ரூபா 5,030 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் சாரண மூட்டு அமைக்கப்பட்டிருக்கவில்லை. | அமைக்குமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. செயன்முன்னேற்றத்தை எதிர்காலத்தில் அறிக்கையட நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (எ) | கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் சபிரி கமக் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் - 2020 கீழ் காமினிபுர கிராம சேவையாளர் பிரிவின் வீதியொன்றுக்கு கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 968,087 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீதியின் இருபக்க விளிம்பினை நிரப்புவதற்காக ரூபா 13,751 ஆன மதிப்பீடொன்று செய்யப் பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரரால் உரிய தரத்திலான கிரவல் மண் இடாமையால் கொடுப்பனவு செய்யப்படவில்லை. இச்செயற்பாடு பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதனை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தார். | மதிபபிடப்பட்ட வகையில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட் டுள்ளதாக உறுதிப்படுத் தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டம் - 2019 இன் கீழ் கநதசுரிகம கிராம சேவையாளர் பிரிவின் வீதியொன்று 69.95 மீற்றர் நீளமாகவும் 3.7 மீற்றர் அகலமாகவும் கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 774,149 செலவிடப்பட்டிருந்தது. இவ்வீதியின் 04 இடங்களில் 122 சதுர மீற்றர் அளவொன்று பழுதடைந்து கற்கள் கலன்று சென்று கொண்டிருப்பதும் கொங்கிரீட் இடப்பட்ட வீதி நடுவில் 26.7 மீற்றர் நீளமான பகுதியொன்று கோடுகள் விழுந்திருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். அந்த இடங்களை மீண்டும் செப்பனிடுமாறு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | வீதியை நீண்டகாலம் பயன்படுத்தக்கூடிய வகையில் உரிய தரத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொனறாகல மாவட்ட செயலகத்திற்குரிய 14 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அலுவலக வளவில் விளைவற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனிடையே 09 வாகனங்கள் பழுதடைந்த நிலைமையில் காணப்படுகின்றன. அவ்வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மொனறாகலை மாவட்ட செயலகத்திலிருந்து பிபில பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருந்த மோட்டார் சைக்கிளொன்று 2014 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அதனைத் திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோடார் சைக்கிளை எதிர்காலத்தில் கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 யூலை 10 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் உள்ள அனைத்து வாகனங்களையும் 2018 யூன் 30 இற்கு முன்னர் கைதவிர்க்குமாறு சகல அரச நிறவனங்களின் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய ஓட்டத்தில் | கெப் வண்டியையும் மோட்டார் சைக்கிள் வண்டியையும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மூலம் மடுள்ள பிரிவில் நடாத்திச் செல்லப்படும் தொழில்நுட்ப பயிற்சி பாடநெறிகளில் பயிற்றுவிப்பதற்காக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளதால் கைதவிர்ப்பு செய்யப்படவில்லை. டிராக்டர் வண்டியை கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்த முடியாத நிலைமையில் உள்ள கெப் வண்டியொன்று, டிராக்டர் வண்டியொன்று மோட்டார் சைக்கிளொன்றும் இழுவையொன்றும் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மின்பிறப்பாக்கியொன்று. ஜீப் வண்டியொன்று, டிராக்டர் பவுசரொன்று, லொறி பவுசர் வண்டியொன்று மற்றும் மோட்டார் சைக்கிளொன்றும் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது | மின்பிறப்பாக்கி தொடர்பாக அடுத்த பொருள் மெய்மையாய்வு குழுவின் தீர்மானத்தின் பிரகாரமும் ஜீப் வண்டியை இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கும் டிராக்டர் பவுசர், மற்றும் லொறி பவுசர் வண்டியை கைதவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவ தாகவும் அறிய தருகின்றேன். மோட்டார் சைக்கிளை மோட்டார் போக்குவரத்து பரிசோதகரின் பரிந்துரை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனறாகலை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2009 மார்ச் 23 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் இக்கெப் வண்டிய காப்புறுதி செய்யப்படாமை காரணமாக திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 3,074,975 ஆன மொத்தச் செலவினத்தையும் அரசின் நிதியிலிருந்து செலவிட நேர்ந்தது. நட்டத்திற்காக பொறுப்புக் கூறவேண்டிய ஒருவர் இல்லையென குறிப்பிட்டு நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் 2015 யூலை 16 | இவ்விபத்திற்குரிய நட்டத்தை புத்தகத்திலிருந்து பதிவழிப் பதற்காக நி.பி 104(4) இன் இறுதி பரிசோதனை அறிகையிலுள்ள தவறுகளைத் திருத்தி நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நி.பி 109 அறிக்கை அமைச்சிற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்காக அங்கீகாரம் வழங்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | புத்தள பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2020 ஆகஸ்ட் 05 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 141,700 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. 2021 மார்ச் 22 ஆந் திகதி வரை விபத்து இடம்பெற்று 07 மாதங்கள் கடந்திருந்த போதும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி பரிசோதனைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் |
| (இ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2002 செப்தெம்பர் 19 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 375,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) இன் அறிக்கையின் பிரகாரம் ரூபா 375,000 ஆன நட்டத்தை சாரதியிடம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந் நட்டத்தை சாரதியிடம் அறவிடுமாறு 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழு கூட்டத்தில் கட்டளையிடப் பட்டிருந்த போதிலும் அக்கட்டளை வழங்கி 08 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அந்நட்டத்தில் இருந்து ரூபா 92,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | இவ்விபத்து தொடர்பாக பொறுப்பான சாரதியிடமிருந்து விபத்திற்குரிய நட்டமான ரூபா 375,000 தொகையில் ரூபா 92,500 இதுவரை அறவிடப்பட்டுள்ளதுடன் மாதமொன்றுக்கு ரூபா 2,500 வீதம் தொடர்ந்து அறவிடப்பட்டு வருவதக அறிய தருகின்றேன் | நட்டத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2020 நவம்பர் 11 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 664,400 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 609,250 மாத்திரம். தேசிய காப்புறுதி நிதியத்திலிருந்து மீளளிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 22 ஆந் திகதி வரை விபத்து இடம்பெற்று 04 மாதங்கள் கடந்திருந்த போதும் | இறுதி பரிசோதனைக் குழுவை நியமிப்பதற்காக 2021 மார்ச் 05 ஆந் திகதிய கடிதத்தில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் இறுதி பரிசோதனை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பரிசோதனை செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2016 திசெம்பர் 17 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 2,630,726 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அவ்விபத்தின் மேற்கொள்ளப்பட்ட திருத்தங் களுக்காக காப்புறுதியிலிருந்த மேவுகை செய்யப்படாத ரூபா 188,524 ஐ மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் ஏற்கப்பட்டிருந்தது. விபத்து இடம்பெற்று அதிக காலம் கடந்திருந்த போதும் 2021 மார்ச் 23 ஆந் திகதி வரை நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை நடாத்தி இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே அரசின் செலவில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 188,524 ஆன திருத்தச் செலவினம் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல் கூற்றில் மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடவதற்கு உள்ள நட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி பரிசோதனைக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பரிசோதனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் நினைவூட்டல் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்த போதும் இதுவரை உரிய அறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பரிசோதனை செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொனறாலை பிரதேச செயலகத்தினால் சபிரி கமக் திட்டம் - 2020 கீழ் ஹுலந்தாவ முதலாவது கட்டம் 12 கடைக்கு அருகில் உள்ள வீதியின் மதகினை திருத்தியமைப்பதற்காக ரூபா 495,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இத்திட்டத்தை செயற்படுத்திய இடத்தில் புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மதகினை உடைத்து அகற்றப்பட்டிருந்தது. | நிர்மாணத்தின் வேலைகள் 2020 நவம்பர் 12 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 28 ஆந் திகதி கிராமிய பாலம் செயற்திட்டத்தின் மூலம் அந்த இடத்திற்காக பாலமொன்று நிர்மாணிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய மதகினை | நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் தேவைப்பாடு தொடர்பாக சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| அதன் பிரகாரம் இச்செயற் திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவின மொன்றாக அவதானிக்கப்பட்டது. | நிர்மாணிக்கும் காலப்பகுதியில் அறிவித்தலொன்று வழங்கப்படவில்லையென அறிய தருகின்றேன். | |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய MO/RG/301 ஆம் இலக்க மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மொனறாகலை மாவட்ட செயலகத்திற்குரிய அரசின் இல்லங்களுக்காக வாடகை அறவிடாமை காரணமாக அவ்வாண்டுகளுக்குரிய நிலுவை வாடகை ரூபா 1,506,250 ஆக இருந்தது. அதில் 2021 மார்ச் இல் உள்ளவாறு ரூபா 17,400 மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதும் ரூபா 1,488,850 மேலும் நிலுவையாக காணப்பட்டது. அரசின் இல்லங்களுக்காக இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதும் மதிப்பீட்டு வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. | 2016 சனவரி முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரை நிலுவை வீட்டு வாடகை அறவிடுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது அதன் போது பல உத்தியோகத்தர்களால் ஒரே தடவையில் கொடுப்பனவு செய்ய முடியாதெனவும் தவணைகளாக கொடுப்பனவு செய்வதற்கு கேட்டுக் கொண்டிருந்ததுடன் அவ்வேண்டுகோள் வரிசை அமைச்சிற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த உத்தியோகத்தர்களிடமிருந்து தற்போது தவணைகளாக அறவிடப்படுவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் அச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்த துடன் மொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | மொத்த பதவியணியினருக்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக இலக்கிடப்பட்ட நோக்கங்கள் வழங்கப்பட்டு ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஆண்டின் ஆரம்பத்தில் செயலாற்றல் உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுகின்றனர். அதன் பிரகாரம் மாதாந்தம் ஒவ்வொரு உத்தியோகத்தராலும் அந்த இலக்கு தொடர்பான செயன் முன்னேற்றம் எனக்கு அறிக்கையிடப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (அ) | மொனறாகலை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் பதவியணியின் விபரங்களின் பிரகாரம் நிறைவேற்றுனர் தரத்தின் 14 பதவிகளும் மூன்றாம் தரத்தின் 17 பதவிகளும் இரண்டாம் தரத்தின் 194 பதவிகளும் ஆரம்ப தரத்தின் 08 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தகவல் தொடர்பாக தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடமாக உள்ள பதவிகள் தொடர்பான பொழிப்பு மற்றும் அறிக்கையொன்று என்னால் அரசாங்க சேவைகள், மாகாண சேவைகள் மற்றும் உள்ளுராட்சிமன்ற இணையத்தளங்களில் மாதாந்தம் நாளது வரையாக்கப்படுகின்றது. | அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் பிரகாரம் 07 பிரதேச செயலகங்களில் 22 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதியணியினரை மிகைத்து மிகையாக காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | எனது வேண்டுகோளின்றி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஊழியர் இணைக்கப்படுவதால் சில பதவிகளுக்காக சிறிய மிகையொன்று காணப்படுவதாக அறிய தருகின்றேன். | மிகை தொடர்பாக உரய நடவடிக்கைகளை எடுபபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2001 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக்கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகள் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் / பதவியிலும் சேவை புரிந்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் வேறு சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எனினும் மொனறாகலை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 584 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 29 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வருடாந்த இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்த அதிகமான உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இடமாற்றங்கள் கிடைக்கப்பெறவில்லையென கண்டறியப்பட்டன. | சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். |